[2019 பிப்ரவரி 14

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில், வளவனாறு, தொண்டியக்காடு shutters-லிருந்து தெற்கே சுமார் 8 கிலோ மீட்டர் தூரம் கஜா புயல் பாதிப்பு காரணமாக தூர்ந்துபோன நிலையில் உள்ளது. எனவே, வளவனாற்றைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

3. விதி 110-ன்கீழ் அறிக்கை

தமிழ்ச் சான்றோர் மற்றும் ஆன்றோர்களான கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர், திரு. இரட்டைமலை சீனிவாசன், திரு. வி.கே. பழனிசாமி கவுண்டர், சர். ஏ.டி. பன்னீர்செல்வம் ஆகியோருக்கு திருவுருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபம் மற்றும் நூலகம் அமைத்தல், திரு. அல்லாள இளைய நாயகருக்கு குவிமாடத்துடன் திருவுருவச் சிலை அமைத்தல், ஒண்டிவீரன் மற்றும் வீரன் சுந்தரலிங்கனார் மணிமண்டபங்களைப் புனரமைத்தல் மற்றும் நூலகம் அமைத்தல், கர்னல் ஜான் பென்னி குவிக் பிறந்த நாள், காளிங்கராயன் தினம் ஆகியவற்றை அரசு விழாக்களாகக் கொண்டாடுதல், மாவீரன் அழகுமுத்துக்கோன், திரு. ம.பொ. சிவஞானம் மற்றும் திரு. சி.பா. ஆதித்தனார் ஆகியோரின் பிறந்த நாட்களில் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டின் சுதந்திரத்திற்காகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், சமுதாய மேம்பாட்டிற்காகவும் மற்றும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் வித்திட்ட பல ஆன்றோர்களையும், சான்றோர்களையும் பல்வேறு காலக்கட்டங்களில் தமிழ்நாடு அரசு பாராட்டியும் கௌரவப்படுத்தியும் வருகிறது.*

2019 பிப்ரவரி 14] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும் தொடர்ந்து இத்தகு ஆன்றோர்களையும், சான்றோர்களையும் பெருமைப்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகிறேன்:

1. எளிமையான தோற்றமும், ஞானத்தின் உச்சமும், குழந்தைகள்மீது அளவற்ற அன்பும் கொண்டவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். குழந்தைகள் விரும்புகின்ற கவிதைகளைத் தந்து, மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்ற அன்னாருக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் முழு உருவ வெண்கலச் சிலையினை அமைத்து பெருமை சேர்த்தார்கள். தமிழ் அன்னைக்கு தனது பாடல்களால் மலரும், மாலையும் சூட்டி அழகு பார்த்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு, அன்னாருடைய பிறந்த ஊரான கன்னியாகுமரி மாவட்டம், தேரூரில் மணிமண்டபம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையினை ஏற்று, ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபமும், அதிலேயே ஒரு நூலகமும் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. கி.பி. 7 ஆம் நூற்றாண்டில், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் களம் பல கண்டு, வெற்றிகள் பல கொண்டு ஆட்சி செய்தவர் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் ஆவார். அவரின் வீரத்தைப் பெருமைப்படுத்தும் விதத்தில், 1996 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகரில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அன்னாருக்கு அரசு சார்பில் சிலை ஒன்றை நிறுவினார்கள். அப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று, அவருடைய புகழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் விதத்தில், பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபமும், அதிலேயே ஒரு நூலகமும் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. திரு. இரட்டைமலை சீனிவாசன் அவர்கள், அரசியல்வாதி, சமூக சீர்திருத்தவாதி, வழக்கறிஞர் என பன்முகங்களைக் கொண்டு, ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகக் குரல் கொடுத்தவர். அவருடைய சேவையைப் பாராட்டி, அன்னாருக்கு 'ராவ் சாகிப்', 'திவான் பகதூர்', 'ராவ் பகதூர்' போன்ற

பட்டங்களை பிரிட்டிஷ் அரசு வழங்கி கௌரவப்படுத்தியது. அன்னாரை பெருமைப்படுத்தும் விதமாக, அவரது பிறந்த நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று, இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் பிறந்த இடமான மதுராந்தகம் அருகிலுள்ள கோழியாளம் கிராமத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன்கூடிய நினைவு மண்டபமும், அதிலேயே நூலகமும் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. விவசாயக் குடும்பத்தில் பிறந்து, விவசாயிகளின் நலனைக் காக்க, பரம்பிக்குளம்-ஆழியாறு அணைக்கட்டுத் திட்டம் தொடங்க காரண கர்த்தாவாக இருந்தவர் திரு. வி.கே. பழனிசாமி கவுண்டர். அவர் சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தார். அப்பகுதி மக்களின் கோரிக்கையினை ஏற்று, திரு. வி.கே. பழனிசாமி கவுண்டர் அவர்களைச் சிறப்பு செய்யும் விதமாக, அவர் பிறந்த இடமான கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூரில் திருவுருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபமும், அதிலேயே ஒரு நூலகமும் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. வழக்கறிஞராக பணியினைத் தொடங்கி, சென்னை மாநிலத்தின் சட்டமன்ற உறுப்பினராகவும், உள் துறை மற்றும் நிதித் துறை அமைச்சராகவும் பணிபுரிந்து, ஆங்கிலேய அரசால் 'ராவ் பகதூர்' மற்றும் 'சர்' பட்டங்களையும் பெற்றவர் சர். ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்கள். நீதிக் கட்சியின் வைரத் தூண் என்று அழைக்கப்பட்ட அன்னாருக்கு, அப்பகுதி மக்களின் கோரிக்கையினை ஏற்று, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபம் அமைத்து, ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-05

6. நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்தில் காவேரியின் குறுக்கே தடுப்பணை அமைத்து, சுமார் 5 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பயன்பெற ராஜவாய்க்கால் ஏற்படுத்தியவர் திரு. அல்லாள இளைய நாயகர். இன்றளவும் அப்பகுதி

விவசாயிகளின் வாழ்வாதாரமாகவே திகழ்கின்ற அக்கால்வாயை அமைத்த அன்னாரை பெருமைப்படுத்தும் வகையில், அப்பகுதி விவசாயப் பெருமக்களின் கோரிக்கையினை ஏற்று திரு. அல்லாள இளைய நாயகர் அவர்களுக்கு ஜேடர்பாளையத்தில் 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குவிமாடத்துடன் (Dome) திருவுருவச் சிலை அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. பூலித்தேவன் படையில் படைவீரனாகவும், படைத் தளபதியாகவும் இருந்த விடுதலைப் போராட்ட வீரரான ஒண்டிவீரன் அவர்களுக்கு 2016 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மணிமண்டபம் அமைத்து திறந்து வைத்தார்கள். அன்னாரது பெருமையை மேலும் சிறப்பிக்கும் வகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒண்டிவீரன் மணிமண்டபத்தை 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்பதுடன், அந்த வளாகத்தில் ஒரு நூலகமும் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. நேர்மை, வீரம், புத்திக்கூர்மை ஆகியவற்றை ஒருங்கே கொண்டு, வீரபாண்டிய கட்டபொம்மனின் வீரத் தளபதியாக விளங்கியவர் வீரன் சுந்தரலிங்கம் அவர்கள். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பே வெள்ளையருக்கு எதிராக முதல் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தியவர் வீரன் சுந்தரலிங்கனார் அவர்கள். அன்னாருக்கு 14-6-2005 அன்று தூத்துக்குடி மாவட்டம், கவர்ணகிரியில் மணிமண்டபம் அமைக்க ஆணை வெளியிட்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெருமை சேர்த்தார்கள். அவருக்கு மேலும் பெருமை சேர்க்க மாண்புமிகு அம்மாவின் அரசு கவர்ணகிரியில் அமைந்துள்ள வீரன் சுந்தரலிங்கனார் மணிமண்டபத்தை 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்பதுடன், ஒரு நூலகமும் அதிலேயே அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு விழாக்கள்:

9. துணிச்சல், மன உறுதி, தன்னம்பிக்கையுடன் விவசாயிகளின் உயிர்நாடியாக விளங்கும் முல்லைப் பெரியாறு அணையைத் தனது சொந்தச் செலவில் கட்டி தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் பாசன வசதி பெற வழிவகுத்த கர்னல் ஜான் பென்னி குவிக் அவர்களின் பிறந்த நாளினை ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாட அப்பகுதி விவசாயப் பெருமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

(மேசையைத் தட்டும் ஒலி) அவர்களது கோரிக்கையினை ஏற்று, கர்னல் ஜான் பென்னி குவிக் அவர்களின் பிறந்த நாளான ஜனவரி மாதம் 15 ஆம் நாள் அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

10. பவானி ஆறு காவேரி ஆற்றுடன் கூடும் இடத்திற்கு சற்று முன்பே அணை கட்டி பவானி ஆற்றின் நீரை வாய்க்கால்மூலம் நேராகக் கொண்டு சென்றால் தண்ணீர் விரைந்து ஒடும் என்பதாலும், வாய்க்கால்களை வளைத்து வளைத்து வெட்டுவதனால் அதிக பரப்பளவு பாசனம் பெறும் என்ற தொலைநோக்குச் சிந்தனையுடனும், விவசாயிகளின் நலன்களுக்காக வாய்க்கால்களை திறம்பட வெட்டி பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தை மாதம் 5 ஆம் தேதி நாட்டுக்கு அர்ப்பணித்தவர் திரு. காளிங்கராயன் அவர்கள். அன்னாருக்கு சிறப்பு செய்யும் வகையில் தை மாதம் 5 ஆம் தேதியன்று பொது மக்கள் சார்பாக காளிங்கராயன் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அவருக்கு மேலும் சிறப்பு செய்யும் விதமாக 13-5-2018 அன்று அவரது முழுவுருவ வெண்கலச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் என்னால் திறந்து வைக்கப்பட்டது. திரு. காளிங்கராயன் அவர்களின் நினைவைப் போற்றுகின்ற வகையில் ஆண்டுதோறும் தை மாதம் 5 ஆம் தேதி அரசு விழாவாகக் கொண்டாடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

11. சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோனின் வீரத்தையும், வரலாற்றையும் உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில், சென்னை எழும்பூரில் அமைக்கப்பட்ட சிலையை 15-3-1996 அன்றும், தூத்துக்குடி மாவட்டம், கட்டாளங்குளத்தில் நினைவு மண்டபத்தை 8-12-2014 அன்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திறந்து வைத்து அன்னாருக்கு பெருமை சேர்த்தார்கள். தூத்துக்குடி மாவட்டம், கட்டாளங்குளத்தில் உள்ள அன்னாரது நினைவு மண்டபத்தில் ஆண்டுதோறும் அவரது பிறந்த நாள் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அன்னாருக்கு மேலும் பெருமை சேர்க்கும் விதமாக சென்னை, எழும்பூரில் அரசின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள வீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் ஜூலை 11 ஆம் நாள் அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சிறப்பிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

12. இந்திய விடுதலைப் போராட்ட வீரரும், சிறந்த தமிழ் அறிஞரும், சிலப்பதிகாரத்தின்மீது ஆளுமை கொண்டிருந்த சிலம்புச் செல்வர் என அனைவராலும் அறியப்பட்டவர், முன்னாள் மேலவைத் தலைவர் திரு. ம.பொ. சிவஞானம் அவர்கள். மொழிவாரி மாநிலங்கள் பிரிவினையின்போது சென்னையை தமிழ்நாட்டின் தலைநகராக தொடரச் செய்யவும், திருத்தணி, செங்கோட்டை பகுதிகளையும், கன்னியாகுமரி மாவட்டத்தையும் தமிழ்நாட்டுடன் இணைக்க பாடுபட்டவர், எழுத்து சீர்திருத்தத்தின்போது 'ஐ'-யும், 'ஔ'-வும் தமிழ் மொழியில் தொடரச் செய்தவர் திரு. ம.பொ. சிவஞானம் அவர்கள். அவரது தமிழ் தொண்டினைப் போற்றிடும் வகையில் சென்னை, தியாகராய நகரில் அமைக்கப்பட்டுள்ள திரு. ம.பொ. சிவஞானம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அன்னாரின் பிறந்த நாளான ஜூன் 26 அன்று அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சிறப்பிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-10

13. தமிழ்நாட்டில் இதழியல் முன்னோடி, இன்றைய முன்னணி நாளிதழ்களில் ஒன்றான "தினத்தந்தி" தமிழ் நாளிதழைத் தொடங்கி, பாமரரும், பாட்டாளியும் எளிய தமிழ்மூலம் படிக்க வழிவகை செய்தவர் திரு. சி.பா. ஆதித்தனார் அவர்கள். தமிழ்நாட்டில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினராகவும், சட்டப் பேரவையின் அவைத் தலைவராகவும், கூட்டுறவுத் துறை அமைச்சராகவும் பணியாற்றியவர் திரு. சி.பா. ஆதித்தனார் அவர்கள். தமிழ் ஆர்வலர்கள் அன்னாரது பிறந்தநாளை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டுமென்று விடுத்த கோரிக்கையினை ஏற்று, சென்னை எழும்பூரில் அமைந்துள்ள திரு. சி.பா. ஆதித்தனார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அவர் பிறந்த நாளான செப்டம்பர் 27 அன்று அரசின் சார்பில் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி சிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புகளையொட்டி, மூன்று கோரிக்கைகளை நான் வைக்கக்

கடமைப்பட்டிருக்கிறேன். முதல் கோரிக்கை என்னவென்றால், நீங்களும், நானும், இப்படிப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் ஆட்சியிலே அமர்வதற்கு வித்திட்டவர், வழிகோலியவர் வெள்ளுடை வேந்தர் சர்.பிட்டி. தியாகராயர் அவர்கள். அவர் அன்றைக்கு பிராமணரல்லாத இயக்கத்தை ஆரம்பிக்காவிட்டால், Justice Party தோன்றியிருக்க முடியாது; பிறகு திராவிட இயக்கம் தோன்றியிருக்க முடியாது. எனவே, பல தலைவர்களுக்கு அரசின் சார்பில் அவர்களது பிறந்தநாளிலே மரியாதை செலுத்துவதற்கு ஆணையிட்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்கள், வெள்ளுடை வேந்தர் தியாகராயர் அவர்களுடைய பிறந்தநாள் அன்றும், அவருடைய சிலைக்கு மாலையிட்டு மரியாதை செலுத்திட வழிவகை செய்ய வேண்டும். இன்னும் சொல்லப்போனால், மாநகராட்சி வளாகத்திற்குள்ளே அமைக்கப்பட்டிருக்கின்ற அந்தச் சிலைக்குப் பதில், சென்னையில் ஒரு பிரதான இடத்தில், நம்மையெல்லாம் இங்கு கொண்டுவந்து இந்த நிலையில் உட்கார வைத்த அவருக்கு ஒரு சிலையை நிறுவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, ஏற்கெனவே நான் ஒரு நாள் தெரிவித்திருந்தேன். திராவிட இயக்கத்தினுடைய கொள்கை மட்டுமல்ல; ஒரு வரலாறு— சிந்துவெளி நாகரிகம் நமது என்பதை மறைக்க வேண்டுமென்று ஆயிரம் பேர் சூழ்ச்சி செய்தாலும், அதற்குத் திடமான ஆதாரங்களைக் கொடுத்தவர் திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள். எனவே, அவர்களது நூல்களெல்லாம் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும் என்று நான் அன்று தெரிவித்தேன். ஏனென்றால், அந்த நூல்களை யாரும் வெளியிடமாட்டார்கள். காரணம் அவை ஆராய்ச்சி நூல்கள். அவையெல்லாம் பாதுகாக்கப்பட வேண்டியவை ஆகும். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அன்றைக்கு அதை செய்து தருவதாகத் தெரிவித்தார்கள். அதையும் செய்ய வேண்டும்.

மூன்றாவதாக, என்னுடைய கோரிக்கை என்னவென்றால், கி.மு. 5000-க்கு முன்பே தொல்காப்பியம் எழுதப்பட்டது. நம்முடைய உலகத்திலே இப்படிப்பட்ட ஒரு இலக்கண நூல் கிடையாது. எழுத்திலக்கணம், பொருளிலக்கணம், சொல்லிலக்கணம், யாப்பிலக்கணம் இவற்றோடு இருக்கக்கூடியது தொல்காப்பியம்தான். அந்தத் தொல்காப்பியத்திற்குப் பிறகு எழுதப்பெற்ற ஒரேயொரு இலக்கண நூல் நன்னூல் ஆகும். அந்த

நூலை எழுதியவர் பவநந்தி முனிவர் அவர்கள். அந்த பவநந்தி முனிவர் அவர்கள் வாழ்ந்தது ஒரு குகை; என் தொகுதியிலிருக்கின்ற வள்ளிமலை என்கிற குகையில்தான் அவர் வாழ்ந்திருக்கிறார். அந்தக் குகையை சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டும். மக்களுக்குத் தெரியாத வரலாறுகளை அவர்களுக்குச் சொல்ல வேண்டும். அது, ஒரு குறுகிய மலைதான். அந்த மலைக்குச் செல்ல வழியில்லை. எனவே, அதை அணுகுகிற வகையில் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டும். அதைச் செய்தால், அந்த இடம் சுற்றுலாத் தலமாகும். பவநந்தி முனிவர் யாரென்பதும் மக்களுக்குத் தெரியவரும். காரணம், என்றைக்கோ அவர்கள் எழுதிவிட்டுப் போனார்கள். அவர்களுக்கெல்லாம் இந்தக் காலத்தில் நாம் சிறப்பு செய்தால்தான், வருங்கால சமுதாயத்தினருக்கு அவர்களைப் பற்றித் தெரியும். இந்த வரலாறுகளெல்லாம் தெரியாத காரணத்தினால்தான், மக்கள் வேறுவழிகளில் சென்றுகொண்டிருக்கின்றனர். எனவே, என்னுடைய இந்த மூன்று கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் அமர்கிறேன்.

4. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த அறிவிப்புகளில் முதல் அறிவிப்பாக, என்னுடைய கொள்ளுத் தாத்தா திரு. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என்றும், அதில் நூலகமும் அமையப்பெறும் என்ற அறிவிப்பும் உண்மையாகவே எங்களுடைய குடும்பத்திற்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால், அந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் வைக்கவேயில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் நான் கோரிக்கை வைக்கவில்லை. அங்குள்ள மக்களின் கோரிக்கை அது. இதேபோல, முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் இருந்தபோது, என்னுடைய கொள்ளுத் தாத்தா அவர்களுக்கு தேரூரில் சிலை அமைத்துக் கொடுத்து, மரியாதை செலுத்தினார். அப்போதும், நான் கோரிக்கை வைக்கவில்லை. அவராகவே முன்வந்து, அங்குள்ள மக்கள் 40 ஆண்டு காலமாக வைத்த